சின்னமனூர் நகராட்சி
சின்னமனூர்.
நாள்:– 28.06.2019

# சாதாரணக் கூட்டம்

திருவள்ளுவர் ஆண்டு, விகாரிவருடம் வைகாசி மாதம் 13–ம் நாள் (ஜீன் திங்கள் 28–ம் நாள்:–28.06.2019) வெள்ளிக் கிழமையன்று பிற்பகல் 05.00 மணியளவில் சின்னமனூர் நகராட்சி தனி அதிகாரி அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் விபரம்.

தனி அதிகாரி மற்றும் ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி.

**பொருள் எண்.01**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களின் 18.06.2019ம் தேதிய ஆய்வுக் கூட்ட அறிவுறுத்தலின்படி சின்னமனூர் நகராட்சியில் 2019–2020ம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் (SWM 2019–20– 9th SHPC )–இன் கீழ்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள ரூ.170.00 இலட்சத்திற்கு விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | பணியின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | Remove the Legacy Waste Dumped in the Compost Yard through Bio-Mining process at Chinnamanur Municipality | 1 | ரூ.170.00 |

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.170.00 இலட்சத்தை முழுமான்யமாக திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **635 , நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.02**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர நகர் அபிவிருத்தி திட்டம் – சுழற்சி நிதியின் கீழ் (UIDSSMT–Revolving Fund) ரூ.96.40 இலட்சம் மதிப்பீட்டில் 2750 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/குவ1, நாள்.25.05.2018ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.13277/2018/DO2, நாள்.06.12.2018ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள 31.01.2019ம் அன்று பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி துவங்கும் நிலையில் உள்ளது. இந்நிலையில் சின்னமனூர் நகராட்சி குடிநீர் விநியோக உபவிதிகள் 2018–ன்படி கீழ்க்காணும் விவரப்படி கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ள தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வகை | குடியிருப்பு (ரூபாயில்) | வணிகம் மற்றும் தொழிற்சாலை (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1. | டெபாசிட் தொகை | ரூ.4000/– | ரூ.8000/– |
| 2. | சாலை சீரமைப்பு கட்டணம்<br>அ) தார் சாலை<br>ஆ) சிமிண்ட் சாலை | <br>ரூ.5364/–<br>ரூ.5819/– | <br>ரூ.5364/–<br>ரூ.5819/– |
| 3. | இணைப்பு பொருட்கள் மற்றும் பணியாளர்<br>அ) தார் சாலை<br>ஆ) சிமிண்ட் சாலை | <br>ரூ.3402/–<br>ரூ.3469/– | <br>ரூ.3402/–<br>ரூ.3469/– |
| 4. | மேற்பார்வை கட்டணம்<br>அ) தார்சாலை<br>ஆ) சிமிண்ட் சாலை | <br>ரூ.1340/–<br>ரூ.1454/– | <br>ரூ.1340/–<br>ரூ.1454/– |
| 5. | விண்ணப்ப பதிவு கட்டணம் | ரூ.100/– | ரூ.100/– |

மேற்காணும் கட்டணங்கள் நிர்ணயம் செய்திடவும் மேற்படி கட்டணத் தொகையினை 10 சமகால தவணைத் தொகைகளில் வீட்டு வரியுடன் சேர்த்து கீழ்க்காணும் விவரப்படியாக நிர்ணயம் செய்து வசூல் செய்திடவும் தனி அலுவலரின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| 10 தவணைகளுக்கான மொத்த தொகை | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்ச்சாலை | சிமிண்ட் சாலை | தார்ச்சாலை | சிமிண்ட் சாலை |
| ரூ.14206/– | ரூ.14842/– | ரூ.18206/– | ரூ.18842/– |

| ஒரு தவணைக்கான திருப்பி செலுத்த வேண்டிய தொகை | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்ச்சாலை | சிமிண்ட் சாலை | தார்ச்சாலை | சிமிண்ட் சாலை |
| ரூ.1425/– | ரூ.1485/– | ரூ.1825/– | ரூ.1885/– |

அலுவலகக்குறிப்பு : 1. மேற்கண்டவாறு தொகை நிர்ணயம் செய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட குடிநீர் திட்டப்பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் கட்டண விகிதத்தில் குடிநீர் குழாய் இணைப்பு வழங்குவதற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்

**அலுவலகக் குறிப்பு:–** **1. மன்றம் அனுமதிக்கலாம்.**
**மேற்கண்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.170.00 இலட்சத்தை முழுமான்யமாக திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் பெற நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துருவினை சமர்ப்பிக்க மன்றம் அனுமதிக்கலாம்.**

தீர்மான எண், நாள் 636 , நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.03**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோகப் பணியில் போதிய பணியாளர்கள் இல்லாததால் தலைமை நீரேற்று நிலையம், குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் குடிநீர் கசிவு போன்றவற்றை கவனிக்க ஒப்பந்த அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது மே–2019 மாதம் முடிய மதிப்பீட்டுத் தொகை முடிவடைவதால், ஜீன் 2019 முதல் அக்டோபர் 2019 வரை பணி மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் செலவினத் தொகைக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோருவதை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1450/2012/இ2)

தீர்மான எண், நாள் 637 , நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**2019ம் ஆண்டு ஜீன் 28.06.2019ம் நாள் வெள்ளிக் கிழமையன்று நடைபெற்ற சாதாரணக் கூட்டத்தின் தீர்மான எண். 638ன் உண்மை நகல்**

*****

சின்னமனூர் நகராட்சியின் குடிநீர்ப் பிரிவு செலவு வரவினை காட்டிலும் கூடுதலாக உள்ளதால், மின் கட்டணம் செலுத்துவதற்கு பற்றாக்குறையாக உள்ளதை கருத்தில் கொண்டு, நகராட்சியில் நடைமுறையில் உள்ள குடிநீர் மாதாந்திர கட்டணத்தினை கீழ்க்கண்டவாறு உயர்வு செய்ய இந்நகர்மன்றத்தின் 31.05.2018 ஆம் நாளிட்ட 399ம் எண் தீர்மானத்தில் அனுமதி வழங்கியுள்ளது.

| வரிசை எண். | தற்போது உள்ள கட்டணம் / வைப்புத் தொகை | | உயர்த்தப்படவுள்ள கட்டணம் | வைப்புத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | வீட்டுப் பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.60/– / ரூ.4000/– | 10000 லிட்டர் வரை ரூ.120/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.12/– | ரூ.4000/– |
| 2. | வணிகப் பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.80/– / ரூ.8000/– | 10000 லிட்டர் வரை ரூ.150/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கும் ரூ.30/– | ரூ.8000/– |
| 3. | தொழிற்சாலை பயன்பாடு இணைப்பு ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு | ரூ.150/– / ரூ.15000– | 10000 லிட்டர் வரை ரூ.300/– 10000 லிட்டருக்கு மேல் ஒவ்வொரு 1000 லிட்டருக்கும் அதன் பாகத்திற்கு ரூ.50/– | ரூ.15000/– |

மேற்கண்ட விவரப்படி குடிநீர் கட்டணங்களை திருத்தியமைப்பதற்கு குடிநீர் விநியோக உபவிதிகளில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ள (Necessary amendments in water supply Bye-Laws) சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் 30.04.2019ஆம் நாளிட்ட ந.க.எண்.12404/17/கு.வ.2 எண் செயல்முறைகளில் பொது அங்கீகாரம் (General Approval) கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**நிபந்தனைகள்**

- நகராட்சி ஆணையாளர், சின்னமனூர் நகராட்சி அவர்கள் இப்பொருள் தொடர்பாக குடிநீர் விநியோக உபவிதிகளில் (தமிழ் மற்றும் ஆங்கிலம்) உரிய திருத்தம் மேற்கொண்டு விதிகளுக்குட்பட்டு மேற்கண்ட குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை வசூலிக்கப்பட வேண்டும்.

- சின்னமனூர் நகராட்சி நகர்மன்ற தீர்மானத்தின்படியும் ஒவ்வொரு ஆண்டிற்கும் 5%க்கும் குறையாமல் குடிநீர் கட்டணம் மற்றும் வைப்புத் தொகை உயர்த்தி வசூலிக்கப்பட வேண்டும். மேலும், புதிய குடிநீர் இணைப்புகளுக்கான குடிநீர் கட்டணம் ஏற்கனவே அமுலில் உள்ள குடிநீர் இணைப்புகளுக்கும் பொருந்தும்.
- உயர்வு செய்யப்பட்ட குடிநீர் கட்டணம் மற்றும் அதே வைப்புத் தொகை விவரங்களை நாளிதழில் (தமிழ் / ஆங்கிலம்) வெளியிட்டு பொது மக்களின் ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசனைகள் பெறப்பட வேண்டும்.
- திருத்தம் செய்யப்பட்ட குடிநீர் விநியோக உபவிதிகளை மாவட்ட அரசிதழில் (தமிழ் / ஆங்கிலம்) பிரசுரம் செய்து அதன் நகல்கள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.
- தேவையான நகர்மன்ற தீர்மானம் மற்றும் துணை விதிகள் நகல்கள் போன்றவற்றுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு முறைப்படி விண்ணப்பித்து இறுதி அங்கீகாரம் பெறப்பட வேண்டும்.
- இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண்.748/2008/கு.வ.2, நாள்.21.09.2009ல் ஏற்கனவே தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டும்.
- குடிநீர் விநியோக திட்டத்திற்கான உரிய அறிவுரைகள் பின்பற்றப்பட வேண்டுமெனவும் அனுமதியற்ற வீட்டுக் குழாய் இணைப்புகளை முறைப்படுத்துதல் தொடர்பான அரசாணையை பின்பற்றும் படியும் அறிவுறுத்தப்படுகிறது.
- பொது அங்கீகாரம் பெற்ற பின் அதை நகர்மன்றத்தில் தீர்மானமாக நிறைவேற்றி நாளிதழில் பிரசுரம் ஆகும் முன் அத்தீர்மான நகலை இவ்வலுவலகத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு, சின்னமனூர் நகராட்சியில் தற்போது நடைமுறையில் உள்ள குடிநீர் கட்டண விகிதங்களை மேற்கண்டவாறு மாற்றியமைத்து உபவிதிகளில் திருத்தம் மேற்கொண்டுள்ளதை நடைமுறைபடுத்தவும், அதனடிப்படையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் திருத்திய பொது அங்கீகாரம் பெறுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** குடிநீர் விநியோக உபவிதிகளில் உரிய திருத்தம் மேற்கொள்வதற்கும், அதனடிப்படையில் திருத்தம் செய்யப்பட்ட உபவிதிகளுக்கு திருத்திய பொது அங்கிகாரம் (Revised General Approval) வழங்கவும் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களை கேட்டுக் கொள்ள மன்றம் தீர்மானிக்கலாம்.

**தீர்மான எண், நாள்** **638 , நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

(ஒம்) திருமதி.ரா.கமலா,
தனி அதிகாரி (ம) ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி

// உண்மை நகல் //

ஆணையாளர்
சின்னமனூர் நகராட்சி

**பொருள் எண்.05**

சின்னமனூர் நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் கீழ்க்கண்ட வாகனங்களுக்கு 2019–2020 ஆம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய சாலைவரி (Road Tax) தொகையினை ரொக்கமாக செலுத்த உத்தமபாளையம் வட்டார போக்குவரத்தில் நேரில் சென்று கேட்பு அறிய பெற்றதை தொடர்ந்து கீழ்க்கண்ட விவரப்படி செலவினத் தொகைக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | வாகன எண். | வாகன விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | TN60Z2921 | டிராக்டர் | 618.00 |
| 2. | TN60S9443 | காம்பாக்டர் | 7144.00 |
| 3. | TN60T4228 | டிப்பர் லாரி | 6000.00 |
| 4. | TN60V8239 | டம்பர் பிளேசர் | 7144.00 |
| 5. | TN60W1755 | டம்பர் பிளேசர் | 7144.00 |

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **பொது சுகாதார பிரிவின் அவசர அவசியம் மற்றும் நாடாளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால் தனி அதிகாரி மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட செலவு மேற்கொண்டதை மன்றம் ஏற்கலாம்.**

**தீர்மான எண், நாள்** **639, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.06**

சின்னமனூர் நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்ட விதி 2016–இன் கீழ் திடக்கழிவு மேலாண்மை குறித்து 2019 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டங்கள் (Action Plan) மற்றும் கொள்கைகள் (Policy) குறித்த அறிக்கை தயாரித்து அதனை நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மதுரை அவர்களுக்கும் 8 பிரதிகள் தயார் செய்து புத்தக வடிவில் அனுப்பிய வகையில் ஆன செலவினம் ரூ.3771/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **தேர்தல் நன்னடத்தை விதி நடைமுறையில் உள்ளதால் தனி அதிகாரி (ம) ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேற்தொகை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.6430/2018/எச்1).**

**தீர்மான எண், நாள்** **640, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.07**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 13வது வார்டு பிள்ளையார் கோவில் தெருவில் பாதாள சாக்கடை திட்டத்தின் கீழ் இணைப்புகள் வழங்கும் பணிக்கு தோண்டி குவிக்கப்பட்ட மண் குவியல்களால் பாத சாரிகளுக்கும், இரு சக்கர வாகனங்கள் சென்று வரவும் மிகவும் இடையூறு ஏற்பட்டு அடிக்கடி விபத்துக்கள் ஏற்பட்ட காரணத்தினாலும், மேற்படி மண் குவியல்கள் சரிந்து சாக்கடையில் அடைப்பு ஏற்பட்டு, சாக்கடை நீர் சாலையின் நடுவில்

தேங்கி சுகாதாரக் கேடு ஏற்பட்டதாலும், அதனை அப்புறப்படுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட ரூ.9600/—க்கான செலவினத்திற்கும், மேற்படி பணியினை நகராட்சியின் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.ஆர்.பரமானந்தன் என்பவர் மூலம் 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15இன் கீழ் மேற்கொண்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், தகவலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—** **பதிவு செய்யலாம். (ந.க.எண்.659/2019/இ1).**

**தீர்மான எண், நாள்** **641, நாள்.28.06.2019**
**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.08

இந்நகராட்சி அலுவலகத்தில் உள்ள சுகாதார அலுவலர், சுகாதார ஆய்வாளர், கணினி அறை, வருவாய் பிரிவு அறை, நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொது பிரிவு ஆகிய இடங்களில் உள்ள குளிரூட்டும் பெட்டியில் சிறு சிறு பழுதுகள் ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ.25000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.2240/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **642, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.09

இந்நகராட்சிக்குச் சொந்தமான தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள நீர் உறிஞ்சும் கிணற்றில் (Infiltration well) நீர் ஊற்று வற்றாமல் தொடர்ந்து நல்ல முறையில் கொடுக்க தூர் எடுக்கும் பணி மேற்கொள்ளவும், மேற்படி கிணற்றினை சுற்றி பெரிய பள்ளம் ஏற்பட்டுள்ளதால் அதனை சரி செய்யவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.9.96 இலட்சம்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும் மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்படி செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்கொள்ளலாம். (ந.க.எண்.2239/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **643, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.10

சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 10.05.2019ம் நாளிட்ட ந.க.எண்.4980/2018/ஜே3 எண்ணிட்ட கடிதத்தின் இந்நகராட்சில் பொது சுகாதார பிரிவில் ஓட்டுநரகளாக 20 ஆண்டுகளுக்கு மேலான மாசற்ற முறையில் விபத்துக்கள் ஏதுமின்றி பணிபுரியும் 1.திரு.சி.ராமையா மற்றும் 2.திரு.எம்.சந்தன மகாராஜன் ஆகிய ஓட்டுனர்களுக்கு தமிழக அரசின் தங்கப் பதக்கம் மற்றும் நற்சான்று வழங்க நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, தங்கப் பதக்கம் நான்கு கிராமம் எடையுள்ள 22 கேரட், வாங்க தமிழ்நாடு கைவினை தொழிலாளர் வளர்ச்சி கழகத்தின் 22.05.2019 ஆம் நாளிட்ட ந.க.எண்.912/SP/2019 கடிதத்தின்படி ஒரு எண்ணம் ரூ.17100/– வீதம் இரண்டு எண்ணம் ரூ.34200/–க்கு தங்கப் பதக்கம் வாங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **திரு.சி.ராமையா, ஓட்டுனர் எதிர்வரும் 31.05.2019ம் அன்று வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறுவதை கருத்தில் கொண்டு பாராளுமன்ற தேர்தல் 2019 நன்னடத்தை விதி 27.05.2019 வரை உள்ளதால் அவசர அவசியம் கருதி தொகை செலுத்தி தங்கப் பதக்கம் வாங்கியது மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.8396/2018/சி1)**

**தீர்மான எண், நாள்** **644, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.11**

இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு அரசாணை எண்.151, நிதி (படிகள்) துறை நாள்.20.05.2019இன்படி அகவிலைப்படி 9 சதவிகிதத்திலிருந்து 12 சதவீதமாக 01.01.2019 முதல் உயர்த்தப்பட்ட அரசாணை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. **மன்றம் பதிவு செய்யலாம் (ந.க.எண்.1892/2019/சி1)**

**தீர்மான எண், நாள்** **645, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.12**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒரே சீராக குடிநீர் வழங்க தலைமை நீரேற்று நிலையத்தில் உள்ள 1,2 மற்றும் 3ம் கிணறுகளில் கூடுதலாக நான்கு புதிய 5HP மோட்டார்கள் பொருத்தி கிணற்றிலிருந்து தலைமை நீரேற்று நிலையம் வரை பைப்லைன் மற்றும் கேபிள் பதிக்கும் பணி மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–** 1. குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண்.2264/2019/இ1)**

**தீர்மான எண், நாள்** **646, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.13**

இந்நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு 3 எண்ணம் கணினி வாங்க 13.06.2019ம் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியமைக்கு கீழ்க்கண்ட விவரப்படி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விவரம் | தொகை ரூ.பை |
|---|---|---|
| 1. | மெர்குரி சாப்ட்வேர் நிறுவனம் | ரூ.35500/– |
| 2. | மெர்குரி கம்ப்யூட்டர்ஸ் | ரூ.36200/– |

**அலுவலகக் குறிப்பு:–** வரிசை எண்.1–இல் காணும் நிறுவனத்தின் குறைவான ஒப்பந்தப்புள்ளி மன்றம் ஏற்கலாம். **(ந.க.எண்.6830/2018/சி1)**

**தீர்மான எண், நாள்** **647, நாள்.28.06.2019**

**தீர்மானம்** **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண்.TN60Z5198க்கு சில மராமத்து பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.30000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:–**
1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியில் மேற்கொள்ளலாம்.**

தீர்மான எண், நாள் 648, நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.15**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு வெளியேறும் கழிவு நீரை தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் மூலம் சோதனை மேற்கொண்ட வகையில் ஆன செலவினம் ரூ.2210/—ஐ தமிர்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தேனி அலுவலக கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட செலவினத்தை வங்கி வரைவோலையாக எடுத்து மாவட்ட சுற்றுச் சூழல் அலுவலா் அவர்களுக்கு அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

இனி வரும் காலங்களில் வரப்பெறும் தொகையினை மேற்கண்ட நிறுவனத்திற்கு கேட்பின் அடிப்படையில் தொகையினை தொடர்புடைய நிறுவனத்திற்கு செலுத்தும் பொருட்டு மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி மன்ற பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:—

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பாதாள சாக்கடை நிதியில் இருந்து செலவினத்தை ஈடு செய்யலாம். (ந.க.எண்.4229/2002/இ1).

தீர்மான எண், நாள் 649, நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.16**

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட காந்தி நகர் காலனி 7வது தெரு மற்றும் பொட்டி மாரியம்மன் கோவில் தெருவில் குடிநீர் குழாய் பதிக்கும் பணிக்கு ரூ.2.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள 12.06.2019ம் தேதியன்று வரப்பெற்ற மறு ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட விவரப்படி மன்ற அனுமதி வேண்டி அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. திரு.ஆர்.பரமானந்தன், ஒப்பந்ததாரர் – 5.06% மதிப்பீட்டைவிட அதிகம்
2. திரு.கே.வனராஜ், ஒப்பந்ததாரர் – 3.85% மதிப்பீட்டைவிட அதிகம்

அலுவலகக் குறிப்பு:— குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள (3.85% ) திரு.கே.வனராஜ் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6561/2018/இ2).

தீர்மான எண், நாள் 650, நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.17**

சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட 2வது வார்டு இராதாகிருஷ்ணா ரைஸ்மில் தெருவில் அமைக்கப்பட்டுள்ள எரிவாயு தகனமேடையின் பராமரிப்புப் பணி 3 ஆண்டு காலத்திற்கு சின்னமனூர் ரோட்டரி சங்கத்திற்கு ஒப்படைக்கப்பட்டு, தகனம் செய்யும் பணி மேற்படி ரோட்டரி சங்கத்தினரால் 23.01.2017ஆம் நாள் முதல் தகனம் செய்யும் பணி நடைபெற்று

வந்தது. இந்நிலையில் சின்னமனூர் ரோட்டரி சங்கத்தினரின் 14.07.2018 ஆம் தேதிய கடிதத்தில், எரிவாயு தகனமேடையில் பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள் பழுதடைந்து விட்டதால், தகனம் செய்யும் பணி நிறுத்தப்பட்டுள்ளதாகவும், அதனை சரி செய்து வழங்க வேண்டப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்படி தகன மேடையில் பணி மேற்கொண்ட நிறுவனங்கள் தொடர்பு கொள்ளப்பட்டு விவரம் சேகரம் செய்யப்பட்டதிலும், மேற்படி எரிவாயு தகனமேடையினை எல்.பி.ஜி—யாக மாற்றம் செய்யும் பணி (அ) Bio Gas அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டதில், சென்னை, M/s SGS Engineering நிறுவனத்தாரின் விலைப்புள்ளியினை ஏற்று, 2019—ஆம் ஆண்டிற்கான பாராளுமன்ற பொதுத் தேர்தல் பணி நடத்தை விதிகள் நடைமுறையில் உள்ளதால், மேற்படி பணியினை அவசரப் பணியாக 1920—ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15—இன் கீழ் மேற்கொண்டு, மேற்படி சென்னை நிறுவனத்திற்கு ரூ.691560/— செலவு செய்யப்பட்டு 10 எண்ணம் LPG சிலிண்டர்கள் சின்னமனூர் மீனாட்சி பாரத் கேஸ் நிறுவனத்திற்கு வைப்புத் தொகை ரூபாய் 17000/— செலுத்தப்பட்டு பணி முடிக்கப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— பதிவு செய்யலாம்.

**தீர்மான எண், நாள் 651, நாள்.28.06.2019**
**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.18

இந்நகராட்சிக்குச் சொந்தமான பொறியியல் பிரிவில் இயங்கி வரும் கீழ்க்காணும் வாகனங்களுக்கு, கீழ் காணும் விவரப்படி 2019—2020ம் ஆண்டிற்கான சாலைவரி (Road Tax) செலுத்த உத்தேச மதிப்பீடு தொகை ரூ.21992/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | வாகன எண். | வாகன விவரம் | தொகை |
|---|---|---|---|
| 1. | TN60S2193 | ஜெட்ராடிங் | 13492.00 |
| 2. | TN60Z5198 | மார்சல் | 2500.00 |
| 3. | TN603761 | தண்ணீர் லாரி | 6000.00 |
| | | | 21992.00 |

அலுவலகக் குறிப்பு:—
1. அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி மேற்கண்ட வாகனங்களுக்கு சாலை வரி செலுத்துவதற்கு முன் அனுமதி பெற்று தொகை செலுத்தியதை மன்றம் ஏற்கலாம்.

**தீர்மான எண், நாள் 652, நாள்.28.06.2019**
**தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.**

*******

## பொருள் எண்.19

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பொலிரோ ஈப்பு வாகன எண்.TN60S2751க்கு வருடாந்திர காப்பீடு 25.07.2019ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (26.07.2019 முதல் 25.07.2020 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு,

தொகை ரூபாய்.13024/—ஐ யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.6260/2014/இ2)

தீர்மான எண், நாள் 653, நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.20**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் இயங்கி வரும் பொலிரோ ஈப்பு வாகன எண்.TN60S5198க்கு வருடாந்திர காப்பீடு 25.07.2019ம் தேதியுடன் முடிவடைகிறது. மேலும் ஒரு வருட காலத்திற்கு (26.07.2019 முதல் 25.07.2020 வரை) காப்பீடு புதுப்பிப்பு செய்வதற்கு, தொகை ரூபாய்.9370/—ஐ யுனைடேட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— 1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் செலவினத்தை வருவாய் மற்றும் மூலதன நிதியிலிருந்து மேற்கொள்வதை மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.4458/2014/இ2)

தீர்மான எண், நாள் 654, நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.21**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான நீர் வடிப்பான் நிலையத்திலிருந்து சாமிகுளம், மின் நகர் போன்ற பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு, மேல்நிலைத் தொட்டியிலிருந்து இணைப்பு வழங்கப்பட்டு 20 குதிரைத் திறன் மோட்டார் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வந்த மின் மோட்டார் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது. குடிநீர் விநியோகப் பணியின் அவசர அவசியம் கருதி புதிதாக இரண்டு எண்ணம் 20 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார் வாங்கவும், நகர்ப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள மின் மோட்டார்கள் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால், அதற்குப் பதிலாக புதிய 6 எண்ணம் 1.5 குதிரை திறன் கொண்ட மின் மோட்டார்கள் விலைப்புள்ளிகள் பெற்று வாங்கவும், 2019ம் ஆண்டிற்கான பாராளுமன்ற பொது தேர்தல் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளதால், செலவினம் ரூ.468146/—யை 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15இன் கீழ் மேற்கொண்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:— பதிவு செய்யலாம்.

தீர்மான எண், நாள் 655, நாள்.28.06.2019

தீர்மானம் அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

*******

**பொருள் எண்.22**

சின்னமனூர் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் எண்.Tn60S6634க்கு சில மராமத்து பணிகள் (ஆயில் சர்வீஸ், ஏர் பில்டர் மாற்றுதல்) வேலைக்கு ஆன செலவு ரூ.5192/—ஐ வழங்கவும், மேற்படி பணியினை தேனியில் உள்ள மகேந்திர கம்பெனி அங்கீகாரம் பெற்ற TVS சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் (பி) லிட் நிறுவனத்தில் மேற்கொண்டமைக்கு அனுமதியும், மேற்படி தொகையினை அவசர பணி நிமித்தம் ஓட்டுனர் திரு.அ.வீரபத்திரன் என்பவர் வழங்கியதால், செலவு தொகையினை அன்னாருக்கு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **அலுவலகக் குறிப்பு:—** | **மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.7057/2014/இ2)** |
| **தீர்மான எண், நாள்** | **656, நாள்.28.06.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

**பொருள் எண்.23**

இந்நகராட்சியின் குடிநீர் விநியோக பணி சீரான முறையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மேலும் குடிநீர் குழாய் பைப்களில் அவ்வப்போது ஏற்படும் உடைப்புகளை சரி செய்வதற்கு, புதிய பைப்கள் மற்றும் பைப் உபகரணங்கள் வாங்குவதற்கு தொகை ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு:—**

1. **மன்றம் அனுமதிக்கலாம்.**
2. **மேற்காணும் செலவினத்தை குடிநீர் மற்றும் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.**
3. **குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் செலவினத் தொகைக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை மன்றம் ஏற்கலாம்.**

| | |
|---|---|
| **தீர்மான எண், நாள்** | **657, நாள்.28.06.2019** |
| **தீர்மானம்** | **அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.** |

*******

1.